
# <u>பத்திரிகைச் செய்தி அறிவித்தல்</u>

## 2013 ஆம் ஆண்டிற்கான காப்புறுதி கைத்தொழில் செயலாற்றுகை


காப்புறுதிக் கைத்தொழில் 2013 ஆம் ஆண்டில் தனது வளர்ச்சியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது எல்லாவற்றையும் உள்ளிட்ட மொத்த எழுத்திலான கட்டுப்பணம் (GWP) 8.39 % னால் வளர்ச்சி அடைந்துள்ளதுடன் மொத்தச் சொத்துக்கள் 12.9% னால் அதிகரித்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் 87,171 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் 94,483 மில்லியன் ரூபாவாக இருந்த நீண்ட கால காப்புறுதிக்கும் பொதுக் காப்புறுதிக்குமான தொழில்களிலிருந்து எல்லாவற்றையும் உள்ளிட்ட மொத்த எழுத்திலான கட்டுப்பண வருமானமானது 8.39% வளர்ச்சியொன்றைக் காண்பித்துள்ளது. நீண்ட கால காப்புறுதித் தொழிலின் எல்லாவற்றையும் உள்ளிட்ட மொத்த எழுத்திலான கட்டுப்பண வருமானமானது 41,306 மில்லியன் ரூபாவாக (2012: ரூபா 37,477 மில்லியன்) இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதியின் மொத்த எழுத்திலான கட்டுப்பண வருமானமானது 53,177 மில்லியன் ரூபாவாக (2012: ரூபா 49,694 மில்லியன்) இருந்தது. அதே வேளையில், 2013 ஆம் ஆண்டில் நீண்ட காலக் காப்புறுதிக்கும் பொதுக் காப்புறுதிக்குமான தொழில்களிலிருந்து 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது எல்லாவற்றையும் உள்ளிட்ட மொத்த எழுத்திலான கட்டுப்பண வருமானமானது 2013 ஆம் ஆண்டில் முறையே 10.22 % மற்றும் 7.01 % வளர்ச்சியைக் காண்பித்துள்ளது.




2012 ஆம் ஆண்டின் முடிவில் 315,817 மில்லியன் ரூபாவாக பதியப்பட்டு 12.9% வளர்ச்சியைக் காண்பித்ததுடன் ஒப்பிடும் போது 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள் 356,566 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. நீண்ட காலக் காப்புறுதித் தொழிலின் சொத்துக்கள் 217,004 மில்லியன்

ரூபாவாக இருந்தது. (2102: 190,642 மில்லியன் ரூபா) அதே வேளை பொதுக் காப்புறுதித் தொழிலின் சொத்துக்கள் 146,778 மில்லியன் ரூபாவாக இருந்தது. (2012: 131,201 மில்லியன் ரூபா) இது 2013 ஆம் ஆண்டின் முடிவில் முறையே 13.83% மற்றும் 11.87% யும் கொண்ட வளர்ச்சி வீதத்தைக் காண்பித்துள்ளன.




2013 ஆம் ஆண்டின் இறுதியில், நீண்டகால காப்புறுதித் தொழிலின் மொத்தச் சொத்துக்களின் 43.33% ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் 94,024 மில்லியன் ரூபா அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. (2012: 98,147 மில்லியன் ரூபா, 51.48%), அதேவேளை பொதுக் காப்புறுதித் தொழிலின் மொத்த சொத்துக்களின் அவ்வாறான முதலீடு 18.79% ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் 27,585 மில்லியன் ரூபாவாக இருந்தது. அதன் பிரகாரம், 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நீண்ட காலக் காப்புறுதித் தொழில் மற்றும் பொது காப்புறுதித் தொழில் இரண்டினதும் மொத்த முதலீடு 121,610 மில்லியன் ரூபாவாக (2012: 127,749 மில்லியன் ரூபா) இருந்தது.

இச்சட்டத்தின் 98 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் காப்புறுதிக் கோரிக்கைகள் மற்றும் முகவர்களின் தகைமைகள் தொடர்பிலான விடயங்கள் பற்றிய காப்புறுதிதாரர்களின் மனக்குறைகள் பற்றி இச்சபையானது விசாரணை செய்கின்றது. இக் காலப் பகுதியில் இலங்கை காப்புறுதிச் சபையானது அவ்வாறான 298 முறைப்பாடுகளை விசாரணை செய்துள்ளது.

2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று செயற்பாட்டிலிருந்த இருபத்தியொரு (21) காப்புறுதிக் கம்பனிகளில் (காப்புறுதியாளர்கள்) 12 கம்பனிகள் கூட்டுக் கம்பனிகளாகவும் (பொது மற்றும் நீண்ட காலகாப்புறுதித் தொழில்கள் இரண்டையும் கையாளுகின்றது) மற்றும் ஆறு (06) பொதுக் காப்புறுதி தொழில் செயல்படுத்துபவர்களாகவும் மூன்று (03) கம்பனிகள் நீண்ட கால (ஆயுள்) காப்புறுதித் தொழில் மட்டும் செயல்படுத்துபவர்களாகவும் இருந்தன.

இச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இலங்கை காப்புறுதிச் சபையுடன் பதிவு செய்துள்ள ஐம்பத்து ஒன்பது (59) காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பிரதானமாக பொதுக் காப்புறுதித் தொழிலில் தீவிரமான ஈடுபாட்டுடன் காப்புறுதித் தரகுத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. பொதுக் காப்புறுதித் தொழில் மூலமாக பிறப்பிக்கப்படும் கட்டுப்பண வருமானமானது 14,192 மில்லியன் ரூபாவாக இருந்தது. (2012 : 12,532 மில்லியன் ரூபா) அதே வேளை நீண்ட காலக் காப்புறுதித் தொழில் மூலமாகப் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பண வருமானமானது 191 மில்லியன் ரூபாவாக இருந்தது. (2012: 195 மில்லியன் ரூபா) பொதுக் காப்புறுதித் தொழில் மற்றும் நீணட காலக் காப்புறுதித் தொழில் ஆகியவற்றில் காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் ஊடாக 2013 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டின் 12,727 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது பிறப்பிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பண வருமானமானது 14,383 மில்லியன் ரூபாவாக இருந்தது. இதன் படி, காப்புறுதித் தரகுத் தொழில் மூலம் பிறப்பிக்கப்பட்ட மொத்த கட்டுப் பண வருமானமானது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 13.02 % மான வளர்ச்சி காண்பித்துள்ளன.

2000 ஆம் ஆண்டின் (சட்டம்) 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதியின் நியதிகளின் பிரகாரம் காப்புறுதிக் கைத்தொழிலானது இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஒழுங்குறுத்தி மேற்பார்வை செய்யப்படுகின்றது.

*குறிப்பு:*

1) *2013 ஆம் ஆண்டின் இலக்கங்கள் கணக்கபாய்வு செய்யப்படாதவைகளாகும்.*
2) *வேலை நிறுத்தம், கலகம், சிவில் கிளர்ச்சி மற்றும் பயங்கரவாதம் என்பன தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கட்டுப் பண வருமானம் (NITF) காப்புறுதிக் கம்பனிகளின் பொதுக் காப்புறுதி மொத்த எழுத்திலான கட்டுப்பண வருமானமானது அகற்றப்பட்டுள்ளது.*
3) *இலங்கை காப்புறுதிச் சபைக்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லையாதலால் மேலே தரப்பட்டுள்ள பகுப்பாய்வில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.*
4) *மொத்த சொத்துக்கள், இடைப் பிரிவு மீதிகள் (அதாவது: நீண்ட காலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதிப் பிரிவுகளுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள்.) 2012 ஆம் ஆண்டில் 6,026 மில்லியன் ரூபாவும் மற்றும் 2013 ஆம் ஆண்டில் 7,216 மில்லியன் ரூபாவும் நீக்கப்பட்டுள்ளன.*

இங்கை காப்புறுதிச் சபை,
11 ஆம் மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.